# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

## அ.வ எண் 159/2023

| | | |
|---|---|---|
| பெயர் | .. | ஜெயா (வாசா1) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| வயது | .. | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு ஜுன் மாதம் 24 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அருணா ரூபாவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
24.06.2025

**முதல் விசாரணை:**

எனது பெயர் ஜெயா. நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் இந்த வழக்கில் 3 ம் வாதி. நான் எனது தரப்பு முதல்விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது தரப்பில் 3 ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் **வா.சா.ஆ.** 1 முதல் **வா.சா.ஆ**. 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கின் நான் கோரும் பரிகாரம் வழங்கிட பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை:** (2 ம் பிரதிவாதி தரப்பு )

பிராது தபசில்சொத்துக்களில் ஜெயா என்ற ஜெயலட்சுமிக்கு பிரிவினை இல்லாத பாகம் உள்ளது என்றால் சரிதான். 2 ம்பிரதிவாதி என் தந்தையின் உடன்பிறந்த சகோதரி அதாவது எனக்கு அத்தை ஆவார்.

**குறுக்கு விசாரணை:**1 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.